# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2005 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம்

---

*(2005 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2005, ஏப்பிறல் மாதம் 01 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்*

**விலை : ரூபா 36.50** **தபாற் செலவு : ரூபா 10.00**

## *2005 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம்*

*[2005 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]*

*ச.வ.ஓ. 9/2005*
*4853*

## *2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—*

*சுருக்கப் பெயர்.*

***1.** இச்சட்டம் 2005 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப் படலாம்.*

*2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

***2.** (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படுவதும்) 2004 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறானதுமான 2000ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப் படுகின்றது :—*

*(1) அப்பிரிவின் (ஏஏ) என்னும் பந்தியில் "வெற்றிகள் அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "வெற்றிகள் " ; என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்*

*(2) அப்பிரிவின் (ஏஏ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :—*

*"(ஏஏஏ) அரசாங்கஞ்சாரா ஒழுங்கமைப்பொன்றின் விடயத்தில், 2005 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், மானியக் கொடைகள், நன்கொடைகள் அல்லது உதவுதொகைகள் என்ற வகையான அல்லது வேறேதேனும் முறையில் அத்தகைய ஒழுங்கமைப்பினால் பெறப்படும் ஏதேனும் பணத்தொகை ; அத்துடன் "*

2 –PL 000171– 1,250 (2005/03)

முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**3.** இரண்டாயிரத்து மூன்றாமாண்டின் 37 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின் வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்திக்கான காப்பு வாசகத்தில் "ஆயின்" , என்னும் சொல்லிலிருந்து அக்காப்பு வாசகத்தின் முடிவுவரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :—

"ஆயின் ,—

(அ) 2005, மாச்சு 31 ஆம் தேதியன்று அல்லது அதன் முன்னர் , பந்தி (அ) வில் குறிப்பீடு செய்யப்பட்ட இலாபங்களின் கூட்டுமொத்தம் நூற்றியைம்பதாயிரம் ரூபாவை விஞ்சாதவிடத்து , நூற்றியிருபதாயிரம் ரூபாவுக்கதிகமான வாடகைப் பெறுமதியின் ஏதேனும் விஞ்சுதொகையும் ; அத்துடன்

(ஆ) 2005, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டுக்காக, பந்தி (அ) வில் குறிப்பீடு செய்யப்பட்ட இலாபங்களின் கூட்டுமொத்தம் நூற்றியைம்பதாயிரம் ரூபாவை விஞ்சுமிடத்து , நூற்றியெண்பதாயிரம் ரூபாவை விஞ்சுவதான ஏதேனும் வாடகைப் பெறுமதி

கவனத்துட் கொள்ளப்படுதலாகாது ; அத்துடன் " ;

(2) அவ்வுட்பிரிவின் (உ) என்னும் பந்தியில் அப்பந்திக்கான முதலாவது காப்பு வாசகத்தை உடனடுத்துவரும் பந்தியில், "தனியானதொரு வரி மதிப்பீட்டிற்குரிய வருமானமாக இருக்கின்றன" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தனியானதொரு வரிமதிப்பீட்டிற்குரிய வருமானமாக அமைகின்றன" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

4. இரண்டாயிரத்து நான்காம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு, அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில் இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பந்தியின் (LXXVII) என்னும் உட்பந்தியில் “வரியிறுப்பனவு நிறுவகம்.” ; என்னும் சொற்களுக்குப் பதிலாக, “வரியிறுப்பனவு நிறுவகம் ;” என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அப்பந்தியின் (LXXVII) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :—

“ (LXXVIII) நோர்டிக் முதலீட்டு வங்கி.” ;

5. இரண்டாயிரத்து மூன்றாமாண்டின் 37 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் “செலுத்தப்பட்ட அலுவலக முறையான வேதனாதிகளும்” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “2005 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்காகச் செலுத்தப்பட்ட அலுவலக முறையான வேதனாதிகளும்” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ;

(2) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :—

“ (ஆஆ)(i) குடியரசின்கீழ் ஏதேனும் வேதனத்துடனான பதவியை வகிக்கின்ற எவரேனும் தனியாளுக்குத் திரட்டு நிதியத்திலிருந்து ;

(ii) ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்துக்குத் திரட்டு நிதியத்திலிருந்து பாராளுமன்றத்தினால் ஆண்டுதோறும் வாக்களிக்கப்படும் பணத்தொகைகளிலிருந்தான முழுமையான அல்லது பகுதியளவிலான வேதனாதிகளிலிருந்து, அத்தகைய வேதனாதிகளை அல்லது அத்தகைய ஓய்வூதியத்தை அல்லது அத்தகைய இலாபங்களைச் செலுத்துகின்ற ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனமாகவுள்ள அத்தகைய கூட்டுத்தாபனத்தின் எவரேனும் ஊழியருக்கு ;

(iii) அரசியலமைப்பின் 154ஆ என்னும் உறுப்புரையின்கீழ் நியமிக்கப்பட்ட, ஏதேனும் மாகாணத்தின் ஆளுநருக்கு ;

(iv) ஏதேனும் மாகாணசபையின் எவரேனும் உறுப்பினருக்கு ;

(v) ஏதேனும் மாகாணசபையின் எவரேனும் ஊழியருக்கு அல்லது ஏதேனும் மாகாணப் பகிரங்க சேவையின் எவரேனும் அலுவலருக்கு ;

(vi) ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் எவரேனும் உறுப்பினருக்கு ;

(vii) ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் எவரேனும் ஊழியருக்கு ;

(viii) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்டதாகக் கருதப்படும் ஏதேனும் பல்கலைக்கழகத்தின் எவரேனும் ஊழியருக்கு ;

(ix) *1988 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கைக் கொள்கைக் கற்கைகள் நிறுவகச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைக் கொள்கைக் கற்கைகள் நிறுவகத்தின் எவரேனும் ஊழியருக்கு ;*

(x) *ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் சபையாக அல்லது விசாரணை ஆணைக் குழுவாக விருப்பதுடன், அதன் உறுப்பினர்கள் எல்லோரும் சனாதிபதியினால் அல்லது அமைச்சரொருவரினால் நியமிக்கப்படுவோராக உள்ள சபையின் அல்லது ஆணைக்குழுவின் உறுப்பினரொருவருக்கு அல்லது ஊழியரொருவருக்கு,*

*செலுத்தப்பட்ட 2005 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டுக்கான அலுலவக முறையான வேதனாதிகளின் ஓரரைவாசியும்,* (i), (ii), (iii), (iv), (v), (vi), (vii), (viii) *அல்லது* (ix) *என்னும் விடயங்களிற் குறிப்பீடு செய்யப்படுகின்றவாறான தனியாளொருவராக, ஊழியரொருவராக, ஆளுநராக அல்லது உறுப்பினரொருவராக, இச்சட்டம் தொடங்குவதற்கு முன்னரோ அல்லது பின்னரோ எவரேனும் தனியாளினால் அல்லது வேறெவரேனுமாளினால் புரியப்பட்ட கடந்தகாலச் சேவைகள் தொடர்பில் அத்தகைய தனியாளினாற் பெறப்படுகின்றவாறான 4 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்படும் அத்தகைய ஏதேனும் ஓய்வூதியமும் அல்லது ஊழியத்திலிருந்தான ஏதேனும் இலாபமும் ;" ;*

*(3) அவ்வுட்பிரிவின் (ஞ) என்னும் பந்தியில், "செலுத்தப்படும் ஏதேனும் பணத்தொகை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2005 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீடாண்டுக்காகச் செலுத்தப்பட்ட ஏதேனும் பணத்தொகை." ; அத்துடன்*

(4) அவ்வுட்பிரிவின் (ஐ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:—

"(ஐஐ) 2005, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரி மதிப் பீட்டாண்டுக்காக, —

(i) ஆணையாளர் தலைமையதிபதியின் அபிப்பி ராயத்தில் அத்தகைய தொழில்தருநரினால் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள எல்லா ஊழியர் களுக்கும் ஒரு சீராக ஏற்புடையற்பாலதான ஒரு திட்டத்துக்கிணங்க அத்தகைய ஊழியர் தன்னிச்சையாக ஓய்வு பெறுவதன் விளைவாக ; அல்லது

(ii) தொழில் ஆணையாளரினால் அங்கீகரிக்கப் படும் ஒரு திட்டத்துக்கிணங்க அத்தகைய ஊழியர் ஆட்குறைக்கப்பட்டதன் விளைவாக,

ஏதேனும் பதவி அல்லது ஊழியம் இழக்கப்பட்டமைக்கான நட்டஈடாகச் செலுத்தப்பட்ட இரண்டு மில்லியன் ரூபாவை விஞ்சாத பணத்தொகையாகவுள்ளதும் எவரேனும் ஊழிய ருக்குச் செலுத்தப்பட்டதுமான ஏதேனும் பணத்தொகையின் அத்தகைய பாகம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**6**. இரண்டாயிரத்து நான்காமாண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாகத்தின் 10 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (உ) என்னும் பந்தியில் "இலங்கை மத்திய வங்கியின் அங்கீகாரத்துடன் வணிக வங்கி எதிலும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இலங்கை மத்திய வங்கியின் அங்கீகாரத்துடன், வணிக வங்கி எதிலும் அல்லது விசேட வங்கி எதிலும்" என்னும் சொற்களை யும் எண்களையும் இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (ஏ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(ஐ) 1971 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசிய சேமிப்பு வங்கியினால் அல்லது (397 ஆம் அத்தியாயமான) இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை வங்கியினால் அல்லது 1971 ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட மக்கள் வங்கியினால் தொழிற் படுத்தப்படும் முதிய பிரசைகளுக்கான ஏதேனும் விசேட வைப்புத் திட்டத்திலிருந்து, இலங்கையில் வதிபவரும் இலங்கைப் பிரசையாகவுள்ளவரும் அந்த வரிமதிப்பீட்டாண்டின் முதலாவது நாளில் அறுபது வயதுக்கு மேற்பட்ட வருமான எவரேனும் தனியாளுக்கு, 2005, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கு கின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் திரளு கின்ற ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத தாகவுள்ள ஏதேனும் வட்டியின் அத்தகைய பாகமும் ;".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**7.** இரண்டாயிரத்து நான்காமாண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (ஐ) என்னும் பந்தியில் "பங்குதாரரொருவருக்குச் செலுத்தப்படும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கூறு வைத்திருப்பவரொருவருக்குச் செலுத்தப்படும்" என்னும் சொற் களை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**8.** இரண்டாயிரத்து மூன்றாமாண்டின் 37 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1அ) என்னும் பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக, பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :—

"(1அ) ஏதேனும் வீடு 2003, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் நிர்மாணிக்கப்படுமிடத்து, அத்தகைய வீட்டின் நிர்மாணம் எந்த வரிமதிப்பீட்டாண்டில் பூர்த்தி செய்யப்பட்டதோ அந்த வரிமதிப்பீட்டாண்டுக்கும், அந்த வரிமதிப்பீட்டாண்டை உடனடுத்துப் பின்வரும் நான்கு வரிமதிப்பீட்டாண்டுகளுக்கும், அத்தகைய வீடு வதிவிட நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படின், அத்தகைய வீட்டிலிருந்து அத்தகைய வீட்டின் சொந்தக்காரருக்குத் திரளுகின்ற வருமானம், வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும் :

ஆயின், வீட்டின் தளப்பரப்பானது ஆயிரத்து ஐந்நூறு அடியாக அல்லது அதற்குக் குறைவாக இருக்குமிடத்து, 2005, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் சொந்தக்காரருக்குத் திரளுகின்ற வருமானம், அவ்வீடு எந்த வரிமதிப் பீட்டாண்டில் பூர்த்தி செய்யப்பட்டதோ அந்த வரிமதிப்பீட்டாண்டுக்கும் அவ்வரிமதிப்பீட்டாண்டை உடனடுத்து பின்வரும் ஆறு வரிமதிப்பீட்டாண்டுகளுக்கும் வருமான வரியி லிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**9.** இரண்டாயிரத்து நான்காமாண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (ஐ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

"(ஐ) (i) 2005, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்கு, தங்கத்தின், இரத்தினக்கற்களின் அல்லது ஆபரணங்களின் விற்பனையிலிருந்து ;

(ii) 2005, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டுக்கு, தங்கத்தின், இரத்தினக் கற்களின் அல்லது ஆபரணங்களின் ஏற்று மதியிலிருந்து,

எவரேனுமாளுக்கு எழுகின்ற 3 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்தெல்லைக்குட்பட்ட இலாபமும் வருமானமும் ;";

(2) அப்பிரிவின் (மம) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

" (மம) 2004, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று தொடங்கி 2004, திசெம்பர் 31 ஆம் தேதியன்று முடிவடைகின்ற காலப்பகுதிக்காக, அத்தகைய கையுதிர்ப்பு, கொள்ளுதலிலிருந்து இரண்டாண்டுகளுக்குப் பின்னர் நடைபெற்றிருக்குமிடத்து, ஏதேனும் பங்குக்கான அல்லது போனஸ் பங்குக்கான அல்லது ஆணைக்கான உரிமையுட்பட ஏதேனும் பங்கின் விற்பனையிலிருந்து, ஒரு கூறு நம்பிக்கைப் பொறுப்பு அல்லது பரஸ்பர நிதியம் தவிர்ந்த எவரேனும் ஆளினால் பெறப்படும் அல்லது அவருக்குத் திரளுகின்ற எவையேனும் இலாபங்களும் ;" ; அத்துடன்

(3) அப்பிரிவின் (மம) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :—

" (மமம) 2005, சனவரி 1 ஆம் தேதியன்று தொடங்கி 2005, மாச்சு 31 ஆம் தேதியன்று முடிவடைகின்ற காலப்பகுதிக்காகவும், 2005, ஏப்பிறல்

1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்காகவும், 2005, ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின்கீழான பங்குக் கொடுக்கல் வாங்கல், அறவீடு, எந்தப் பங்கு, பங்குக்கான உரிமை, போனஸ் பங்கு அல்லது பங்கு ஆணை தொடர்பில் வரி இறுக்கப்பட்டுள்ளதோ அந்த ஏதேனும் பங்கின், ஏதேனும் பங்குக்கான உரிமையின், போனஸ் பங்கின் அல்லது பங்கு ஆணையின் விற்பனையிலிருந்து அல்லது அத்தகைய கையுதிர்ப்பு, கொள் ளுதல் தேதியிலிருந்து இரண்டாண்டுகளுக்குப் பின்னர் நடைபெற்றுள்ளவிடத்து ஏதேனும் கூறுநம்பிக்கைப்பொறுப்பு அல்லது பரஸ்பர நிதியம் அல்லது ஏதேனும் முயற்சி மூலதனக் கம்பெனி தவிர்ந்த எவரேனும் ஆளினால் அல்லது பங்குடைமையினால் பெறப்பட்ட அல்லது அவருக்கு அல்லது அதற்குத் திரளுகின்ற இலாபங்களும் ;".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 16அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**10.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 16ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், இது, அச்சட்டவாக்கத்தின் 16அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

*"இலங்கைக்கு வெளியேயிருந்து பெறப்பட்ட இலாபங் களுக்கும் வருமானத்துக்கு மான விலக்களிப்பு.*

16அ. இச்சட்டத்தின் வேறேதேனும் ஏற்பாட்டில் முரணாக எது எவ்வாறிருப்பினும், இலங்கையில் வதிவற்றவராகவிருந்து இலங்கைக்கு வந்து தங்கியிருக்கும் எவரேனும் தனியாளினால் இலங்கைக்கு வெளியேயிருந்து பெறப்படும் இலாபங்களும் வருமானமும், அத்தகைய தனியாள் அங்ஙனம் வந்தடையும் நேரத்திலும், அங்ஙனம் தங்கியிருந்தலின் முழுமையான காலத்தின்போதும் இலங்கையினதும் வேறேதேனும் நாட்டினதும் பிரசையொருவராகவிருப்பின், வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 17அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், இது, அச்சட்டவாக்கத்தின் 17அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :

"கமத்தொழிற் பொறுப்பு முயற்சியிலிருந்தான இலாபங்களும் வருமானமும் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல்.

17அ. (1) ஏதேனும் கமத்தொழிற் பொறுப்பு முயற்சிலியிலிருந்தான இலாபங்களும் வருமானமும் (மூலதனச் சொத்துக்களின் விற்பனையிலிருந்தான எவையேனும் இலாபங்களும் வருமானமும் தவிர), 2005, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று தொடங்குகின்றதிலிருந்து கணிக்கப்படும் ஐந்தாண்டுக் காலப்பகுதிக்கு வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக "ஏதேனும் கமத்தொழிற் பொறுப்புமுயற்சியிலிருந்தான இலாபங்களும் வருமானமும்" என்பது, காணியின் பயிரிடுகையிலிருந்தும் அதன் விளைச்சலின் விற்பனையிலிருந்தும் ஆன இலாபங்களும் வருமானமும் என்று பொருளாகும் :

ஆயின், காணியின் பயிரிடுகையிலிருந்தான விளைச்சல், ஒரு பொறுப்பு முயற்சியின்போது தயாரிப்பின் அல்லது உற்பத்தியின் ஏதேனும் செயல் முறைக்கு அமைந்ததாக உள்ளவிடத்து, அத்தகைய விளைச்சல், அத்தகைய விற்பனை நேரத்தில் நிலவுகின்ற திறந்த சந்தை விலையில் தயாரிப்புக்காக அல்லது உற்பத்திக்காக விற்பனை செய்யப்பட்டதெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், காணியின் பயிரிடுகையிலிருந்தும் அதிலிருந்தான விளைச்சலின் விற்பனையிலிருந்தும் ஆன இலாபங்களும் வருமானமும், அத்தகைய கருதப்பட்டவாறான விற்பனையிலிருந்து எழுகின்ற இலாபமாகவும் வருமானமாகவும் கருதப்படுதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**12.** இரண்டாயிரத்து நான்காமாண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவு, "இரண்டாயிரம் சதுர அடிக்கு" என்ற சொற்களிலிருந்து அப்பிரிவின் முடிவு வரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "இரண்டாயிரம் சதுர அடிக்கு மேற்படாத தளப் பரப்பளவைக் கொண்டதும், 1977 சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் அத்தகைய ஆளினால் நிர்மாணிக்கத் தொடங்கப்பட்டதுமான ஏதேனும் வீட்டை அல்லது தொடர்மாடியை 2005, மாச்சு 31 ஆம் தேதியன்று அல்லது அதன் முன்னர் விற்குமிடத்து, அத்தகைய விற்பனை அவ்வீட்டின் அல்லது தொடர்மாயின் முதலாவது விற்பனையாக இருப்பதனால், அத்தகைய விற்பனையிலிருந்து எழும் இலாபங்களினதும் வருமானத்தினதும் எழுபத்தைந்து வீதம், வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 21அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**13.** இரண்டாயிரத்து நான்காமாண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 21அ என்னும் பிரிவு, அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (iii) ஆம் பந்தியில் "பாரம்பரிய மற்ற உற்பத்திப் பொருட்கள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பாரம்பரியமற்ற உற்பத்திப் பொருட்கள்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆஆ) என்னும் பந்தியில் —

(அ) அப்பந்தியில் (i)ஆம் உட்பந்தியில் "இருபத்தைந்து சதவீதப்படி"; என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வரும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் :—

"இருபத்தைந்து சதவீதப்படி

ஆயின், 2005, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் கொள்ளப்படும் மென்பொருளின் விடயத்தில், —

(அ) அத்தகைய மென்பொருள் இலங்கையில் அபிவிருத்தி செய்யப்பட்ட மென்பொருளொன்றாக இருக்குமிடத்து, நூறுவீதமாக இருத்தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) அத்தகைய மென்பொருள் இலங்கையில் அபிவிருத்தி செய்யப்படும் மென்பொருள் தவிர்ந்ததாக இருக்குமிடத்து, இருபத்தைந்து வீதமாக இருத்தல் வேண்டும் ;";

(ஆ) அப்பந்தியின் (vi) ஆம் உட்பந்தியில் "1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க," என்னும் சொற்களிலிருந்தும் எண்களிலிருந்தும் அப்பந்தி முடிவுவரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாகப் பின்வரும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் :—

"(vi) 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட வாணிபக் கூறொன்றாக அல்லது ஏதேனும் ஹோட்டல் கட்டிடமொன்றாக (ஹோட்டல் கட்டிடத் தொகுதியொன்று உட்பட) பயன்படுத்தப்படுவதற்கென நிர்மாணிக்கப்பட்டதுமான கொள்ளப்பட்ட ஏதேனும் தகைமைபெற்ற கட்டிடம் அல்லது கூட்டாட்சி ஆதனமொன்றின் ஏதேனும் கூறு அல்லது

அத்தகைய கட்டிடங்களை ஏதேனும் வர்த்தகத்தில் அல்லது வியாபாரத்தில் பயன்படுத்தியுள்ள ஆளொருவரிடமிருந்து கொள்ளப்பட்ட எதேனும் கைத்தொழிற் கட்டிடம் (கைத்தொழில் கட்டிடத்தொகுதி உட்பட) விடயத்திற்கேற்ப நிர்மாணச் செலவின்மீது அல்லது கொள்ளற் செலவின்மீது ஆண்டொன்றுக்கு ஆறும் முன்றிலிரண்டு சதவீதப்படி ;"; அத்துடன்

(இ) அப்பந்திக்கான காப்புவாசகத்தில்,

"(v) அல்லது இப்பந்தி" என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக, "(v) அல்லது (vi) " என்னும் சொல்லையும் எண்களையும் இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (க) என்னும் பந்தியக்கான காப்புவாசகத்தின் (iஈ) என்னும் உட்பந்தியை உடனடுத்துக் காணப்படும் பந்தியில் "உட்பந்திகள் (1அ), (iஆ) அத்துடன் (iஇ)" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "உட்பந்தி (iஅ), (iஆ), (iஇ) அத்துடன் இவ்வுட்பந்தி" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ; அத்துடன்

(3) அப்பிரிவின் (3அ) என்னும் உட்பிரிவை (3அ) என்னும் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன் மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**15.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் —

(அ) அப்பந்தியின் (i) ஆம் உட்பந்தியில் "குறிப்பீடு செய்யப்பட்ட பயிற்சி," என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2004, மாச்சு 31 ஆம் தேதிக்கு முன்னர் குறிப்பீடு செய்யப்பட்ட பயிற்சி," என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ; அத்துடன்

(ஆ) அப்பந்திக்கான காப்புவாசகத்தில், 2002, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "2002, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 2005, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ;

(2) அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் —

(அ) 23 ஆம் பிரிவில் (1) ஆம் உட்பிரிவின் என்னும் சொற்களுக்குப் பதிலாக "2005, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் 23 ஆம் பிரிவில் (1) ஆம் உட்பிரிவின்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(ஆ) அப்பந்திக்கான காப்புவாசகத்தில், "2002, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "2002, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 2005, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ;

(3) அவ்வுட்பிரிவின் (உ) என்னும் பந்திக்கான காப்புவாசத்தில் "2002, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர்" என்னும் சொற்களுக்கும்,

எண்களுக்கும் பதிலாக, "2002, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 2005, ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு முன்னர்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ;

(4) அவ்வுட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியில், "2002, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில்" என்னும் சொற்களுக்கும்எண்களுக்கும்பதிலாக, "2002, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிலும், 2005, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிலும்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் :

(5) அவ்வுட்பிரிவின் (ஔ) என்னும் பந்தியில், அப்பந்தியின் (iv) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்திகளை உட்புகுத்துவதன் மூலமும் :–

"(v) 2004, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர், 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின்கீழ் அறவிடப்படும் ஏதேனும் பொருளாதாரச் சேவைக் கட்டணம் ;

(vi) 2005, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், 2004 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் IIIஅ என்னும் அத்தியாயத்தின்கீழ் அறவிடப்படும் நிதிச் சேவைகள் மீதான ஏதேனும் சேர்பெறுமதி வரி ;

(vii) 2005, ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின்கீழ் அறவிடப்படற்பாலதானதும் முதலாம் அட்டவணையின் (4) ஆம் விடயத்திற் குறிப்பீடு செய்யப்பட்டதும் 2005, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் அறவிடப்பட்டதுமான ஏதேனும் சமூகப் பொறுப்புடைமை அறவீடு ; அத்துடன்

(6) அவ்வுட்பிரிவின் முடிவில் பின்வரும் புதிய பந்திகளைச் சேர்ப்பதன் மூலமும் :—

“ (ம) எவையேனும் பொருட்களின் அல்லது பண்டங்களின் ஏற்றுமதி வியாபாரம் சம்பந்தமான மட்டும் அல்லது வெளிநாட்டு நாணயத்தில் கொடுப்பனவு செய்வதற்கான எவையேனும் சேவைகளை வழங்குவதற்காக மட்டும் உறப்பட்ட இலங்கைக்கு வெளியேயான விளம்பரச் செலவு தவிர, 2005, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் அத்தகைய ஆளினால் கொண்டுநடாத்தப்படும் அல்லது பிரயோகிக்கப்படும் ஏதேனும் வர்த்தகம், வியாபாரம், உயர்தொழில் அல்லது வாழ்க்கைத் தொழில் சம்பந்தமாக அவரின் விளம்பரச் செலவினது ஓரரைவாசி ;

(ய) ஏதேனும் காலப்பகுதியில் உறப்பட்ட எந்தத் தலைமையலுவலகச் செலவினம் என்ற தன்மையிலான செலவினத்தின் இலாபங்களையும் வருமானத்தையும் குறிப்பீடு செய்வதன் மூலம் 2005, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்காக அத்தகைய வர்த்தகத்திலிருந்தான அல்லது வியாபாரத்திலிருந்தான நியதிச் சட்டமுறையான வருமானம் கணிப்பீடு செய்யப்படுகின்றதோ அந்தச் செலவினமாகவுள்ள, ஏதேனும் வதிவற்ற கம்பெனியினால் இலங்கையில் கொண்டு நடாத்தப்படும் ஏதேனும் வர்த்தகத்தில் அல்லது வியாபாரத்தில் உறப்படும் ஏதேனும் செலவினம்.

இப்பந்தியின் நோக்கத்துக்காக, “தலைமையலுவலகச் செலவினம்” என்னும் சொல்லமைப்பு, இச்சட்டத்தின் 24அ என்னும் பிரிவில் கொடுக்கப்பட்டவாறான அதே பொருளையுடையதாதல் வேண்டும்.”.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 24அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**16.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், இது, அச்சட்டவாக்கத்தின் 24அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"ஏதேனும் வதிவற்ற கம்பெனி யினால் உறப்படும் தலைமை யலுவலகச் செலவுகளைக் கழித்தல்.

24அ. (1) ஏதேனும் வர்த்தகத்தை அல்லது வியாபாரத்தை இலங்கையில் கொண்டு நடாத்துகின்ற ஏதேனும் வதிவற்ற கம்பெனி, தலைமையலுவலகச் செலவினம் என்ற தன்மை யிலான ஏதேனும் செலவினத்தை 2005, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் உறுமிடத்து, அத்தகைய வர்த்தகத்திலிருந்து அல்லது வியாபாரத்திலிருந்து அத்தகைய வரி மதிப்பீட்டாண்டுக்காக அத்தகைய கம்பெனியின் இலாபங்களிலிருந்தும் வருமானத்திலிருந்தும், பின்வருவனவற்றின் குறைந்த தொகைக்கு சமமாகவுள்ள பணத்தொகையொன்று கழிக்கப்படு தல் வேண்டும் :—

(அ) அத்தகைய செலவினத்தின் தொகை ; அல்லது

(ஆ) அத்தகைய இலாபங்களின் அல்லது வருமானத்தின் பத்து சதவீதத்துக்குச் சம மாகவுள்ள தொகை.

(2) இப்பிரிவின் நோக்கத்துக்காக, "தலைமை யலுவலகச் செலவினம்" என்பது, வதிவற்றவொரு கம்பெனி தொடர்பாகவும், ஏதேனும் வரிமதிப் பீட்டாண்டு தொடர்பாகவும், பின்வரும் செலவின முட்பட, இலங்கைக்கு வெளியே அத்தகைய கம்பெனியினால் அல்லது அதன் சார்பில் உறப் படும் நிறைவேற்று மற்றும் பொது நிருவாகச் செல வினம் என்று பொருளாகும் ; பின்வருவதனையும் அது உள்ளடக்கும் :—

(அ) இலங்கைக்கு வெளியேயுள்ள அத்தகைய கம்பெனியின் ஏதேனும் அலுவலகத்திலுள்ள ஒவ்வோர் ஊழியரினாலும், அதில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள அல்லது அதன் அலுவல்களை முகாமை செய்கின்ற வேறு ஒவ்வோர் ஆளினாலும் பெறப்படும், ஊழியத்திலிருந்தான மொத்த இலாபங்களினதும் கூட்டு மொத்தத்தையும் பொறுப்பேற்கப்பட்ட பிரயாணத்தின் மொத்தச் செலவையும் கொண்டுள்ள செலவினம் ; அத்துடன்

(ஆ) (i) இலங்கைக்கு வெளியேயுள்ள எவையேனும் வளவுகள் ; அத்துடன்

(ii) விடயத்தின் எல்லாச் சூழ்நிலைகளையும் கருத்திற்கொண்டு நியாயமாகவுள்ளதும், வணிகரீதியில் நியாயப் படுத்தக்கூடியதுமாகவுள்ளனவென, ஆணையாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான நிறைவேற்று மற்றும் பொது நிருவாகம் என்பவற்றுடன் சம்பந்தப்பட்ட அத்தகைய வேறு கருமங்கள்,

தொடர்பிலான செலவினம்.”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**17**. இரண்டாயிரத்து நான்காம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1அ) என்னும் பந்தியின் உட்பிரிவில் —

(அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் “நியதிச் சட்ட வருமானம் ; அத்துடன்” என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, “நியதிச் சட்ட வருமானம் ;” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ;

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "நியதிச் சட்டவருமானம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "நியதிச் சட்ட வருமானம்; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(இ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(இ) (420 ஆம் அத்தியாயமான) பதிவு செய்யப்பட்ட பங்குத்தொகுதி, பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் பிணையத்தின்மீது அல்லது திறைசேரி முறியின்மீது அல்லது (417 ஆம் அத்தியாயமான) திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட எவையேனும் திறைசேரி உண்டியல்களின்மீது அல்லது (422ஆம் அத்தியாயமான) பணச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட எவையேனும் மத்திய வங்கிப் பிணையங்களின்மீது இரண்டாம் நிலைச் சந்தைக் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் எவரேனும் தனியாளுக்கு எழுகின்ற அல்லது திரளுகின்ற வட்டியிலிருந்தும் எந்த வட்டியின்மீது முதனிலை விற்பனையாளரொருவரிடமிருந்து 122அ என்னும் பிரிவின் கீழான வரி கழிக்கப்பட்டுள்ளதோ அந்த வட்டியிலிருந்தும் ஆன நியதிச் சட்ட வருமானம் ;";

(2) அப்பிரிவின் (1ஆ) என்னும் உட்பிரிவில் "உட்பிரிவுகள் (1அ) அத்துடன் (1ஆ) என்பதன் நோக்கங்களுக்காக" என்பதிலிருந்து அப்பந்தியின் முடிவுவரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாகப் பின்வரும் சொற்களை இடுவதன் மூலமும் :—

"இப்பிரிவின் (1அ) அத்துடன் (1ஆ) என்னும் உட்பிரிவுகளின் நோக்கங்களுக்காக —

"வட்டி வருமானம்" என்பது, இப்பிரிவின் உட்பிரிவு (1ஆ) வின் உட்பந்தி (ஆ) வில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பிணையத்தின் அல்லது சாதனத்தின் வழங்குநரினால் அத்தகைய பிணையத்தின் அல்லது வேறு சாதனத்தின் முதிர்வு காலப்பகுதியின்மீது எவரேனும் வைத்திருப்பவரினால் அத்தகைய பிணையத்தின் அல்லது வேறு சாதனத்தின் வைத்திருக்கைக் காலப்பகுதிக்கு விகிதாசாரமாக அனுமதிக்கப்பட்ட வட்டியின் அல்லது கழிப்பனவின் விகிதாசாரத் தொகை என்று பொருளாகும் ;

"முதனிலைச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்" என்பது, (420 ஆம் அத்தியாயமான) பதிவு செய்யப்பட்ட பங்குத் தொகுதி, பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் பிணையத்தின் அல்லது திறைசேரி முறியின் அல்லது (417 ஆம் அத்தியாயமான) உள்ளூர்த் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட திறைசேரி உண்டியலின் அல்லது (422 ஆம் அத்தியாயமான) பணச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட மத்திய வங்கிப் பிணையத்தின் மூல வழங்குகையின் நேரத்தில் வழங்குநரினாலான ஏதேனும் கழிப்பனவுக்கு அல்லது வட்டிக் கொடுப்பனவுக்கமைய எவரேனும் முதனிலை விற்பனையாளரினால் அத்தகைய பிணையத்தின் உண்டியலின் அல்லது முறியின் கொள்வனவு என்று பொருளாகும் ;

"இரண்டாந் நிலைச் சந்தைக் கொடுக்கல் வாங்கல்" என்பது, இப்பிரிவின் (1ஆ) என்னும் உட்பிரிவின் உட்பந்தி (ஆ) வில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒரு பிணையத்தை அல்லது வேறு சாதனங்களைக் கொள்ளுதல் செய்த முதனிலை வியாபாரியினால் அத்தகைய பிணையம் அல்லது வேறு சாதனங்கள் விற்பனை செய்யப்படுதல் அல்லது கொள்ளுதல் தேதியிலிருந்து ஒரு நாளுக்கு மேற்பட்டவொரு காலப்பகுதிக்கு அத்தகைய ஏதேனும் பிணையத்தின் அல்லது சாதனத்தின் அல்லது வைத்திருக்கையின் மூலவழங்குகையின் பின்னர் அத்தகைய பிணையத்தை அல்லது வேறு சாதனங்களை மீள்கொள்வனவு செய்தல் அல்லது எதிர் மீள்கொள்வனவு செய்தல் என்று பொருளாகும்." ;

(3) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் —

(அ) அவ்வுட்பிரிவின் (அஅஅ) என்னும் பந்தியின் (iv) ஆம் உட்பந்தியில்காணப்படுகின்ற "வட்டி" என்பதன் வரைவிலக்கணத்தின் (i) ஆம் பந்தியை நீக்கிவிடுவதன் மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

(i) 2004, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஏதேனும் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக அல்லது கொள்வனவு செய்வதற்காக அல்லது ஏதேனும் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக, ஏதேனும் அமைவிடத்தைக் கொள்வனவு செய்வதற்காக ; " ;

(ஆ) அவ்வுட்பந்தியின் (ஊ) என்னும் பந்தியில் —

(i) அந்த ஆண்டிற்கு மொத்த நியதிச் சட்ட முறையான வருமானத்தின் முப்பத்தைந்து சதவீதமான உச்சவரம்புவரை” என்னும் சொற்களுக்கும் அத்துடன் “அடுத்துவரும் ஆண்டின் வரி மதிப்பீட்டாண்டின்போதும் பின்னரும்” என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வரும் சொற்களை இடுவதன் மூலம்.

“அந்த ஆண்டிற்கான மொத்த நியதிச் சட்ட வருமானத்தின் முப்பத்தைந்து சதவீதமான உச்சவரம்புவரை –

(அ) உட்பிரிவு (1அ) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட வட்டியிலும் பங்கிலாபங்களிலுமிருந்து நிதியச் சட்டவருமானத்தின் ;

(ஆ) உட்பந்தி (1ஆ) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் வட்டி வருமானத்தின் ; அத்துடன்

(இ) ஏதேனும் சன்மானத்தின், குற்றப் பணத்தின், பங்கொன்றின், ஏதேனும் லொத்தர் பரிசின் அத்துடன் உட்பிரிவு (1இ) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட செலுத்தப்படற்பாலதான நட்ட ஈட்டினுடைய ஏதேனும் வட்டியின் கூட்டுமொத்தத் தொகையின்மீது

உச்ச முப்பத்தைந்து சதவீதமான வரம்புவரை” என்னும் சொற்களையும், “அத்துடன் கழிக்கப்பட முடியாத நட்டம் அடுத்துவரும் வரிமதிப்பீட்டாண்டின் போதும் பின்னரும்” என்னும் சொற்களையும் முறையே இடுவதன் மூலம்.

(ii) அப்பந்திக்கான காப்புவாசகத்தின் (iii) ஆம் விடயத்தில், "வருமான வரியிலிருந்து கழிக்கப் பட்ட" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய கடனிறுக்க வகையற்றமையின் வெளிப்படுத்துகையை அடுத்து எழுகின்ற வருமான வரியிலிருந்து கழிக்கப்பட்ட" என் னும் சொற்களை இடுவதன் மூலம் ; அத்து டன்

(4) அப்பிரிவின் (2அ) என்னும் உட்பிரிவில் "இரண்டாம் உட்பிரிவின் பந்திகள் (ஆ), (இ), (ஈ) அத்துடன் (உ) என்பவற்றின் ஏற்பாடுகள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இரண்டாம் உட்பிரிவின் பந்திகள் (ஆ), (இ), (ஈ) அத்துடன் (உ) என்பவற்றின் அல்லது (4) ஆம் உட்பிரிவின் அல்லது (5) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின் (i) ஆம், (ii) ஆம் உட்பந்திகளின் அல்லது (8) ஆம் உட்பிரிவின் (6) ஆம், (7) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள்" என்னும் சொற்களையும் இலக்கங்களை யும் இடுவதன் மூலம்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**18.** 2004 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவுக்கான காப்பு வாசகத் தில் "இரண்டு மில்லியன் ரூபாவிலும் அதிகமாயுள்ள வாறான, 2004, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் செய்யப்பட்ட பணம் தவிர்ந்த வேறு வகையான" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "இரண்டு மில்லியன் ரூபாவிலும் அதிக மாயுள்ளவாறான 2004, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 2005, சனவரி 1 ஆம் தேதிக்கு முன்னர் செய்யப்பட்ட பணம் தவிர்ந்த வேறு வகையான" ;

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் –

(அ) என்னும் பந்தியில் :—

(அ) அப்பந்தியின் (i) ஆம் உட்பந்திக்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலம் :—

“ (i)(அ) இரண்டாம் உட்பந்தியின் பந்திகள் (ஆ),(இ), (எ), (ஏ), (ஐ), (ஒ), (ஓ) என்பவற்றில் குறிப்பீடு செய்யப்பட்டவற்றைத் தவிர, 2004, மாச்சு 31 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன் முடிவுற்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் அவரால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட ; அத்துடன்

(ஆ) இரண்டாம் உட்பிரிவின் பந்திகள் (அ), (ஆ),(இ),(உ),(எ),(ஏ),(ஐ),(ஒ),(ஓ) என்பவற்றில் குறிப்பீடு செய்யப்பட்டவற்றைத் தவிர 2004, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் அவரால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட

எல்லாத் தகைமை பெறும் கொடுப்பனவுகள் தொடர்பிலும் அத்தகைய வரிமதிப்பிடற்பாலதான வருமானத்தின் மூன்றிலொரு பங்கு அல்லது இருபத்தையாயிரம் ரூபா என்பவற்றுள் எந்தத் தொகை, குறைவானதோ அந்தத் தொகையை விஞ்சுதலாகாது ” ; அத்துடன்

(ஆ) அப்பந்தியின் (iii) ஆம் உட்பந்தியில் "அந்த வரிமதிப்பீட்டாண்டில் அவரால் செய்யப் பட்ட" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2004, மாச்சு 31 ஆம் தேதிக்கு முன்னர் அவரால் செய்யப்பட்ட" என்னும் சொற்களை இடுவதன்மூலம் ; அத்து டன்

(இ) அப்பந்தியின் (v) ஆம் உட்பந்திக்குப் பதிலாக பின்வரும் உட்பந்தியை இடுவதன்மூலம் :

" (v)(அ) 2004, மாச்சு 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் செய்யப்பட்ட வையும் 2 ஆம் உட்பிரிவின் பந்திகள் (அ), (இ),(ஈ), (உ), (ஊ) என்பவற்றில் குறிப்பீடு செய்யப்பட்டவையுமான எல்லாத் தகைமை பெறும் கொடுப்ப னவுகளினதும் கூட்டுமொத்தம் தொடர்பில் இருபத்தையாயரம் ரூபாவை விஞ்சுதலாகாது ; அத்துடன்

(ஆ) 2004, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் செலுத்தப் பட்டவையும் (2) ஆம் உட்பிரிவின் பந்தி கள் (அ), (உ) மற்றும் (எ) என்பவற்றில் குறிப்பீடு செய்யப்பட்டவையுமான எல்லாத் தகைமை பெறும் கொடுப்ப னவுகளினதும் கூட்டுமொத்தம் தொடர் பில் எழுபத்தையாயிரம் ரூபாவை அல்லது அத்தகைய வரிமதிப்பிடப் படற்பாலதான வருமானத்தின் மூன்றி லொரு பங்கை விஞ்சுதலாகாது ;" அத்துடன்

(3) உட்பந்தி (6அ) என்பதில் " (2) ஆம் உட்பந்தியின் (ஐ) அல்லது (ஊ) என்னும் பந்தியில்" என்னும் சொற்க ளுக்கும் இலக்கத்திற்கும் பதிலாக, " (2) உட்பந்தியின் பந்தி (ஐ) என்பதில்" என்னும் சொற்களையும் இலக்கத்தையும் இடுவதன் மூலம்.

**19**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 38ஈ என்னும் பிரிவு "ஆளாதல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வரும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

*முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு 38ஈ என்பதனைத் திருத்துதல்.*

"ஆளாதல் வேண்டும் :

ஆயினும், 2005, சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஏதேனும் பங்கின் விற்பனை தொடர்பில் 2005, ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின்கீழ் பங்குக் கொடுக்கல் வாங்கல் விதிப்பனவு செலுத்தப்பட்டிருப்பின் அத்தகைய விற்பனை தொடர்பில் இப்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் ஆகாது.".

**20**. 2003 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 39 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்திக்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 39 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

"(ii) இச்சட்டத்தின் 17அ என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, எத்தன்மைத்தான விவணரத்தைக் கொண்டவையுமான தாவரங்களைப் பயிரிடும் காணி ; அத்துடன் ;"

**21**. 2004 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 48அ என்னும் பிரிவு "11 ஆம் பிரிவின் அ" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "11 ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (அ)" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 48அ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

முதன்மைச் சட்டவாக்கத்தின் 52அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**22.** 2004 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 52அ என்னும் பிரிவு இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "2003 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "2003 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர், ஆனால் 2005 மாச்சு 31 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்கும்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலம் ; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "இரண்டாயிரத்து மூன்றாம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "இரண்டாயிரத்து மூன்றாம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 2003 ஏப்பிறல் 1 ஆம் தேதியின் பின்னர் தொடங்கும்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலம்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 53 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**23.** 2004 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 53 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியில் "(அ) என்னும் பந்தியின்கீழ்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 60 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**24.** 2004 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 60 ஆம் பிரிவு "2004 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "2002 ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

**25.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 62 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 62 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "ஐந்து ஆட்களுக்கு அதிகமாகாதவர்களால் கட்டுப்படுத்தப்படும் கம்பெனி ஒன்றின் விடயத்தில் வரிமதிப்பீட்டாளர், கம்பெனி அதன் பங்குதாரர்களுக்கு ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கான அதன் இலாபங்களின் நியாயமான பாகம் ஒன்றினை பகிர்ந்தளிக்கவில்லை எனத் திருப்திப்பட்டால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக :-

(அ) ஐந்து ஆட்களுக்கு அதிகமாகாதவர்களால் கட்டுப்படுத்தப்படும் கம்பெனி ஒன்றின் விடயத்தில் 2005 ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் ; அல்லது

(ஆ) ஏதேனும் கம்பெனியின் விடயத்தில் 2005, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப் பீட்டாண்டு தொடர்பில்,

கம்பெனி அதன் பங்குதாரர்களுக்கு ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்கான அதன் இலாபங்களின் நியாயமான பாகம் ஒன்றினைப் பகிர்ந்தளிக்கவில்லையென வரிமதிப்பீட்டாண்டு திருப்திப்படுமிடத்து" என்னும் சொற்களை இடுவதன்மூலம்.

(2) அப்பிரிவின் (7) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்வதன் மூலம்.

**26.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 72அ என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 72அ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "செலுத்தப்படுதல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "செலுத்தப்படுதல் வேண்டும் :

ஆயினும், 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின்கீழ் செலுத்தப்பட்ட பொருளாதார சேவை விதிப்பனவு இப்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் செலுத்தப்படற்பாலதான வருமானவரியை விடக் கூடுதலாக இருப்பின், 2005 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட வருமானவரியானது, ஏற்புடைத்தாதலாகாது :

ஆயினும், மேலும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் செலுத்தப்படற்பாலதான வருமானவரி 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின்கீழ் செலுத்தப்பட்ட பொருளாதார சேவை விதிப்பனவைவிடக் கூடுதலாயின், செலுத்தப்படற்பாலதான வருமான வரியின் தொகை அதே வரிமதிப்பீட்டாண்டிற்காகச் செலுத்தப்பட்ட பொருளாதார சேவை விதிப்பனவிலிருந்து குறைக்கப்படுதல் வேண்டும். அத்துடன்

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "பங்குடைமையால் செலுத்தப்பட்ட பொருளாதார சேவைக் கட்டணத்தின்கீழ் எதிராக" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பங்குடைமையால் செலுத்தப்பட்டதான 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின்கீழ் விதிக்கப்பட்ட பொருளாதார சேவைக் கட்டணத்திற்கெதிராக" என்னும் சொற்களை இடுவதன்மூலம்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 96அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**27.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 96 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது இச்சட்டவாக்கத்தின் பிரிவு 96அ என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும் :-

"அரசாங்க சார்பற்ற ஒழுங்கமைப்புகளின் இலாபங்களும் வருமானமும் வருமானவரி விதிக்கப்படற்பாலதாதல்.

96அ. (1) இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறான ஏதேனும் அரசாங்க சார்பற்ற ஒழுங்கமைப்பு 2005 ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் மானியங்கள், நன்கொடைகள், உதவுதொகைகள் என்றவகையில் அல்லது வேறு ஏதேனும் வழிகளில் ஏதேனும் பணத்தைப் பெறுமிடத்து, இச்சட்டத்தின் வேறு ஏதேனும் ஏற்பாட்டில் முரணாக எது எவ்வாறிருப்

பினும் அத்தகைய பணத்தொகையின் மூன்று சதவீதத்திற்கு சமமான தொகையொன்று அத்தகைய வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய அரசாங்க சார்பற்ற ஒழுங்கமைப்பின் முழு இலாபங்களும் வருமானமுமாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய இலாபங்களும் வருமானமும் இலங்கையில் எழுவதாகக் கருதப் படுதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்கு ஓர் அரசாங்க சார்பற்ற ஒழுங்கமைப்பு என்பது ஆட்கள் குழுவொன்றினால் தன்னிச்சையான அடிப் படையில் உருவாக்கப்பட்டதும், இயல்பில் அரசாங்க சார்பற்றதும் உள்ளூரில் அல்லது ஏதேனும் வெளிநாட்டிலிருந்து அல்லது ஏதேனும் வெளிநாட்டு அல்லது உள்ளூர் ஒழுங்கமைப் பிடமிருந்து பெறப்படும் மானியங்களில், நன்கொடைகளில் உதவு தொகைகளில் அல்லது பணத்தில் அல்லது வேறு ஏதேனும் வழிகளில் தங்கியிருப்பதும், வறியவர்களுக்கும், ஆதரவற்றவர்களுக்கும், நோயாளருக் கும், அனாதைகளுக்கும் விதவைகளுக்கும், இளைஞர்களுக்கும், சிறுவர் களுக்கும் நிவாரணச் சேவைகள் அளிப்பதற்கெனவும், பொதுவில் அனர்த்தம் ஏற்படும் நேரங்களில் உதவி தேவைப்படுவோருக்கு நிவாரணம் வழங்குவதற்கெனவும் உருவாக்கப்பட்டதென இப்பிரிவின் கீழ் ஆணையாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்பட்டதுமான அரசாங்க சார்பற்ற ஒழுங்கமைப்பு என்று பொருள்படும்.

(3) அரசாங்க சார்பற்ற ஒழுங்கமைப்பின் இலாபங் களும் வருமானமும் இச்சட்டத்திற்கான ஆறாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறான தோதான வீதத்தில் வருமானவரி அறவிடப்படற் பாலதாதல் வேண்டும் :

ஆயினும், ஏதேனும் அரசாங்க சார்பற்ற ஒழுங்கமைப்பு -

(அ) அத்தகைய நோக்கங்களுக்காக அரசாங்கத்தினால் இனம்காணப்பட்ட ஏதேனும் இடப்பரப்பிலுள்ள புலம்பெயர்ந்த ஆட்களுக்குப் புனர்வாழ்வளித்தலிலும், உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதிலும் சீவனோபாய ஆதரவளித்தலிலும் ; அல்லது

(ஆ) ஏதேனும் அனர்த்தத்தின் தன்மையையும், பாரதூரமான இயல்பையும், இதன் விளைவாக வழங்கப்படுவதற்குத் தேவைப்பட்ட நிவாரணத்தின் உச்ச அளவையும் கவனத்துட்கொண்டு, மனிதாபிமான தன்மையுடையதென அமைச்சரினால் அங்கீகரிக்கப்படும் வேறேதேனும் செயற்பாட்டில்.

ஈடுபட்டுள்ளதென ஆணையாளர் திருப்திப்படுமிடத்து ஆணையாளர் தலைமையதிபதி அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய அரசாங்க சார்பற்ற ஒழுங்கமைப்பினால் செலுத்தப்படற்பாலதான வரியை அனுப்பலாம்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 98 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**28.** 2004 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 98 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

(1) அப்பிரிவின் (1இ) என்னும் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "அனுப்புகைகள் எவையும் வெளிப்படுத்தப்படாதிருக்குமிடத்து" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அனுப்புகைகள் எவையும் செய்யப்படாதிருக்குமிடத்து" என்னும் சொற்களை இடுவதன்மூலம் :

(2) அப்பிரிவின் (1இ) என்னும் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகளை உட்புகுத்துவதன்மூலம் :

"(1ஈ) (அ) 2005 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டின்போது இந்த உட்பந்தியின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஐந்து

தேவைப்பாடுகளுள் எவையேனும் நான்கு தேவைப்பாடுகளைத் திருப்திப் படுத்தும் எவரேனும் தனியாள், அத்தகைய தேவைப்பாட்டை நிறைவுசெய்த தன் பின்னர் ஒரு மாதம் பிந்தாமல் ஆணையாளர் தலைமையதிபதிக்கு வருமானம் பற்றிய விவரத்திரட்டொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஆ) இவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் நோக்கத்திற்கான, தேவைப் பாடுகள் பின்வருமாதல் வேண்டும் :—

(i) தேறிய தொகையொன்றாகிய பத்தாயிரம் ரூபாவை விஞ்சிய மாதாந்த வதிவிட மின்சார விலைப்பட்டியலொன்றைச் செலுத்துதல் ;

(ii) இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சிய மாதாந்த கிறடிட் அட்டை விலைப்பட்டியலொன்று உறப்படுதல் ;

(iii) தேறிய தொகையாகிய பத்தாயிரம் ரூபாவை விஞ்சிய மாதாந்த வதிவிட தொலைபேசி விலைப்பட்டியலொன்றைச் செலுத்துதல் ;

(iv) வெளிநாட்டிற்குப் பிரயாணம் செய்வதற்கான விமானப் பயணச்சீட்டொன்றைக் கொள்வனவு செய்தல் ; அத்துடன்

(v) பிரயாண நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் மோட்டார் வாகனமொன்றைச் சொந்தமாக வைத்திருத்தல்.

(1உ) இச்சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளின் கீழ் வருமானவரி செலுத்துவதற்குப் பொறுப்புடையவராகக்கூடிய ஒவ்வோராளும் பின்வருவனவற்றை வெளிப்படுத்தத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும் :—

(அ) 2005 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டின் கடைசி நாளில் சொத்து மற்றும் பொறுப்பு ஒவ்வொன்றினதும் பெறு மதியை ; அத்துடன்

(ஆ) 2005 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு இச்சட்டத்தின்கீழ் வருமானவரிக் கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கப் பட்ட எவையேனும் இலாபங்கள் அல்லது வருமானம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 104 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**29.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 104 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :

(1) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "தவறுகின்ற விடத்து ; அல்லது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தவறுகின்றவிடத்து;" என்னும் சொற்களை இடுவதன்மூலம் ;

(2) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் "தவறுகின்ற விடத்து", என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தவறு கின்றவிடத்து;" அல்லது" என்னும் சொற்களை இடுவதன்மூலம் ; அத்துடன்

(3) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன்மூலம் :-

"(ஈ) ஆளெவரும் 98 ஆம் பிரிவின் (1ஈ) என்னும் உட்பந்தியில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக் குள் உட்பிரிவின்கீழ் கொடுத்துதவுமாறு அவர் தேவைப்படுத்தப்பட்ட விவரத்திரட்டை 2005 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் கொடுத்துதவத் தவறுகின்றவிடத்து,"

முதன்மைச் சட்டவாக்கத்தில் புதிய அத்தியாயம் XIVஅ என்பதனை உட்புகுத்துதல்.

**30.** முதன்மைச் சட்டவாக்கத்தின் அத்தியாயம் XIV என்பதனை உடனடுத்துப் பின்வரும் புதிய அத்தியாயம் இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன் அது இச்சட்டவாக்கத்தின் XIVஅ என்னும் அத்தியாயமாகப் பயனுறுதலும் வேண்டும்.

## அத்தியாயம் XIVஅ

### அரசாங்க நிறுவனமொன்றினால் வருமானவரிக் கொடுப்பனவு தொடர்பிலான ஏற்பாடுகள்

அரசாங்க நிறுவனமொன்றினால் அதன் ஊழியர்களுக்கான வருமானவரிக் கொடுப்பனவு.

121அ. (1) அச்சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவிலும் அத்தியாயங்கள் XIII மற்றும் XIV என்பவற்றிலும் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும் 2005, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு அரசாங்க நிறுவனமொன்றின் எவரேனும் ஊழியரின் அலுவலகமுறையான வேதனாதிகளின் அரைவாசிக்கு ஏற்றிக்கூறப்படற்பாலதான வருமானவரி, அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய ஊழியரின் அலுவலகமுறையான வேதனாதிகளின் அத்தகைய பாகம் 30 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட விடுதொகைக்குச் சமமானவொரு தொகையை விஞ்சுமாயின் அத்தகைய நிறுவனத்தினால் செலுத்தப்படுதல் வேண்டும் ;

ஆயினும், அத்தகைய வருமானவரியின் பாகம் எதுவும் அத்தகைய ஊழியருக்கு மீளளிப்புச் செய்யப்படுதலாகாது அல்லது அத்தகைய ஊழியரால் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் வரிக்கெதிராக எதிரீடு செய்யப்படுதலுமாகாது.

(2) இச்சட்டத்தின் 4 ஆம் பிரிவில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும் அரசாங்க நிறுவனமொன்றின் எவரேனும் ஊழியரின் அலுவலகமுறையான வேதனாதிகளின் அரைவாசி தொடர்பிலான வருமானவரி அத்தகைய ஊழியரின் தொழிலிலிருந்து தேறும் இலாபங்களின் பாகமாக அமையமாட்டாது எனக் கருதப்படுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்கு "அரசாங்க நிறுவனமொன்றின் எவரேனும் ஊழியரின் அலுவலக முறையான வேதனாதிகளின் அரைவாசிக்கு ஏற்றிக்கூறப்படற்பாலதான வருமானவரி" என்பது அத்தகைய ஊழியரின் வேதனாதிகளின் அரைவாசியிலிருந்து 30 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட விடுதொகைக்குச் சமமான பணத்தொகையைக் கழித்தபின்னர் அதன்மீது இச்சட்டத்தின் முதலாம் அட்டவணையின் 1ஈ என்னும் பாகத்தில் குறித்துரைக்கப்பட்ட வீதங்களின்படி கணிப்பிடப்பட்ட வருமானவரி என்று பொருள்படும்

(4) இவ்வத்தியாயத்தின் நோக்கங்களுக்காக —

"அரசாங்க நிறுவனம்" என்பது குடியரசின்கீழ் ஏதேனும் கொடுப்பனவு செய்யப்படும் அலுவலகம், ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனம், மாகாணசபை, ஓர் உள்ளூர் அதிகாரசபை, பல்கலைக்கழகம், நிறுவனம். சபை அல்லது இச்சட்டத்தின் 9 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்படும் ஆணைக்குழு என்று பொருள்படும்.

"அலுவலகமுறையான வேதனாதிகள்" என்பது ஓய்வூதியம் புறநீங்கலாக, வழங்கப்படும் சேவைகளுக்காகப் பெறப்படும் 4 ஆம் பிரிவின் (1 ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறித்துரைக்கப்பட்டவாறு தொழிலில் நின்றெழுகின்ற இலாபங்கள்" என்று பொருள்படும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 122ஆ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**31.** 2004 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 122ஆ என்னும் பிரிவு, (1) ஆம் உட்பிரிவில் "அத்தகைய கொடுப்பனவு 2002 நவெம்பர் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் இடம்பெறுமிடத்து" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய கொடுப்பனவு 2002 நவெம்பர் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 2005 ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன் இடம்பெறுமிடத்து" என்னும் சொற்களை இடுவதன்மூலம், இத்தால் மேலும் திருத்தப்படுகிறது.

**32.** 2004 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 123அ என்னும் பிரிவு, "அத்தகைய பிணையம், முறி அல்லது உண்டியல் 2002 ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் வழங்கப்பட்டுள்ளவிடத்து" என்னும் சொற்களுக்கும் "அத்தகைய வட்டி வருமானம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய பிணையம், முறி அல்லது உண்டியல்" என்னும் சொற்களையும் "அத்தகைய வட்டி வருமானம்" என்னும் சொற்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 123அ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**33.** 2004 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 123ஆ என்னும் பிரிவு"அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், "விடயத்திற்கேற்ப 122அ அல்லது 122ஆ என்னும் பிரிவின்கீழ்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய வட்டி செலுத்தப்படுமிடத்து அல்லது வரவு வைக்கப்படுமிடத்து, விடயத்திற்கேற்ப 122அ அல்லது 122ஆ என்னும் பிரிவின்கீழ்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகிறது.

*முதன்மைச் சட்டவாக்கத் தின் 123ஆ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**34.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 124ஆ என்னும் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "அந்தத் தனியாள் தவிர்ந்த எவரேனும் தனியாள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கம்பெனியொன்றாக இருக்கும் எவரேனும் ஆள், அல்லது வியாபாரப் பெறுமதியொன்றான வட்டி வருமானம் பெறுகின்ற வேறு ஏதேனும் ஆள் அல்லது பங்குடைமை" என்னும் சொற்களை இடுவதன்மூலம், இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 124ஆ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**35.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 129அ என்னும் பிரிவு "144 ஆம் பிரிவின் (3அ) என்னும் உட்பிரிவில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "144 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவில்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 129அ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**36.** 2004 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 132அ என்னும் பிரிவு உட்பிரிவிற்கான இரண்டாம் காப்பு வாசகத்தில் "அத்தகைய ஆள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய ஆள் அல்லது பங்குடைமை" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 132அ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

முதன்மைச் சட்டவாக்கத்தின் 132ஆ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**37.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 132ஆ என்னும் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :

(1) அப்பந்தியின் (i) ஆம் உட்பந்தியில் "ஒவ்வொரு மாதத்தினதும் கடைசி வேலைநாளன்று" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஒவ்வொரு மாதத்தினதும் கடைசி வேலைநாளன்று அல்லது ஏதேனும் மாதத்தில் கடைசி சன்மானக் கொடுப்பனவுத் தேதியன்று" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(2) அப்பந்தியின் (ii) ஆம் உட்பிரிவில் "ஒவ்வொரு மாதத் தினதும் கடைசி வேலைநாளன்று" என்னும் சொற் களுக்குப்பதிலாக, "ஒவ்வொரு மாதத்தினதும் கடைசி வேலைநாளன்று அல்லது ஏதேனும் மாதத்தில் குற்றப் பணப்பங்குக் கொடுப்பனவின் கடைசி நாளன்று" என்னும் சொற்களை இடுவதன்மூலம்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 134 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**38.** 2004 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசி யாகத் திருத்தப்பட்ட முதன்மைச் சட்டவாக்கத்தின் 134 ஆம் பிரிவு அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) "விவரத்திரட்டொன்றைச் செய்துள்ள அத்தகைய ஆளினால்" என்னும் சொற்களிலிருந்து, "ஐந்தாண்டு கள் கழிந்தபின்னர்" என்பது வரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாக, பின்வரும் சொற்களை இடுவதன்மூலம் :

"இச்சட்டத்தின்கீழ் -

(அ) வரிமதிப்பீட்டாண்டை உடனடுத்துப் பின் னுறும் வரிமதிப்பீட்டாண்டின் நவெம்பர் 30 ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் அவரது வருமானத்தின் விவரத்திரட்டொன்றைச் செய் துள்ள எவரேனும் ஆளினால் அந்த வரிமதிப் பீட்டாண்டில் முடிவிலிருந்து மூன்று ஆண்டு கள் கழிந்தபின்னர் ; அத்துடன்

(ஆ) முற்போந்த பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆள் தவிர்ந்த வேறு எவரேனும் ஆளினால் அந்த வரிமதிப்பீட்டாண்டின் முடிவிலிருந்து ஆறு ஆண்டுகளைக் கொண்டவொரு காலப் பகுதி கழிந்ததன் பின்னர் :"

(2) அவ்வுட்பிரிவுக்கான இரண்டாவது காப்புவாசகத்தில் "அந்த வரிமதிப்பீட்டாண்டின் முடிவின் பின்னரான ஐந்து ஆண்டுகளுக்குப் பிந்தாமல்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அந்த வரிமதிப்பீட்டாண்டின் முடிவின் பின்னர் ஏதேனும் நேரத்தில்" என்னும் சொற்களை இடுவதன்மூலம்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 144அ என்னும் பிரிவை நீக்கஞ் செய்தல்.

**39.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 144அ என்னும் பிரிவு இத்தால் நீக்கம்செய்யப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 162அ என்னும் பிரிவை மாற்றீடு செய்தல்.

**40.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 162அ என்னும் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"குறித்தசில சூழ்நிலைகளில் ஐந்து ஆண்டுகள் முடிவுற்றதன் பின்னர் வழக்கு தொடங்கப்படுதலாகாது.

162அ. ஆணையாளர் தலைமையதிபதி, 2004 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உண்ணாட்டரசிறை (மன்னிப்பு ஒழுங்குவிதி) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, எந்த வரிமதிப்பீட்டாண்டில் வரி அறவிடப்பட்டதோ அல்லது விதிப்பனவு செய்யப்பட்டதோ அந்த வரிமதிப்பீடு 142 ஆம் பிரிவின்கீழ் முற்றானதும் முடிவானதுமாகின்ற வரிமதிப்பீட்டாண்டின் முடிவிலிருந்து ஐந்து ஆண்டுகள் முடிவுற்றதன் பின்னர் தவணைதவறுகையிலுள்ள வரியை அறவிடுவதற்கு இச்சட்டத்தில் 148 ஆம், 149 ஆம், 150 ஆம், 151 ஆம் அல்லது 152 ஆம் பிரிவின்கீழ் வழக்கு எதனையும் தொடுத்தலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத் திற்கான முதலாம் அட்டவணை யைத் திருத்துதல்.

**41.** 2004 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத் தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் முதலாம் அட்ட வணை இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது.

(1) அந்த அட்டவணையின் பாகம் 1 இ என்பதில் "2004 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின் னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு" என்னும் சொற்களுக்குப்பதிலாக, "2004, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப்பின்னர் ஆனால் 2005, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம்.

(2) அவ்வட்டவணையின் பாகம் 1 இ என்பதனை உடன டுத்துப் பின்வரும் புதிய பாகத்தை உட்புகுத்துவதன் மூலம் :

"பாகம் 1ஈ

2005, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு :

| | |
|---|---|
| வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் முதல் 3,00,000 ரூபாவின்மீது | 5 சதவீதம் |
| வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் அடுத்த 2,00,000 ரூபாவின்மீது | 10 சதவீதம் |
| வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் அடுத்த 2,00,000 ரூபாவின்மீது | 15 சதவீதம் |
| வரிவிதிக்கப்படற்பாலதான அடுத்த 2,00,000 ரூபாவின்மீது | 20 சதவீதம் |
| வரிவிதிக்கப்படற்பாலதான அடுத்த 2,00,000 ரூபாவின்மீது | 25 சதவீதம் |
| வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் மீதியின்மீது | 30 சதவீதம்". |

(3) அவ்வட்டவணையின் பாகம் IIIஆ என்பதனை உடனடுத்துப் பின்வரும் புதிய பாகத்தை உட்புகுத்துவதன்மூலம் :

"பாகம் III இ

2005 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு,

| | |
|---|---|
| 20,00,000 ரூபாவின்மீது, 32 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ), (ஆ), (இ), (ஈ). (உ) அல்லது (ஊ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்படும் கொடுப்பனவுகளின் ஏதேனும் வகுதி தொடர்பில் உதவுதொகை காலப்பகுதி அல்லது சேவைக்காலப் பகுதி இருபது ஆண்டுகளுக்குக் குறைவாக இருப்பின் | இல்லை |
| முதல் 10,00,000 ரூபாவின்மீது 32 ஆம் பிரிவின் (2) ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ), (ஆ), (இ), (ஈ), (உ) அல்லது (ஊ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்படும் கொடுப்பனவுகளின் ஏதேனும் வகுதி தொடர்பின் உதவுதொகைக் காலப்பகுதி அல்லது சேவைக்காலப்பகுதி இருபது ஆண்டுகளுக்குக் குறைவாயின் | இல்லை |
| அடுத்த 5,00,000/- ரூபாவின்மீது | 5% |
| அடுத்த 5,00,000/- ரூபாவின்மீது | 10% |
| மீதியின்மீது | 15%". |

**42.** 2004 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்திற்கான ஆறாம் அட்டவணை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் ஆறாம் அட்டவணையைத் திருத்துதல்.*

(1) அவ்வட்டவணையின் 20 ஆம் விடயத்தில் "பதினைந்து சதவீத உச்சவரம்பிற்கமைய" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பத்துசத உச்சவரம்பிற்கமைய" என்னும் சொற்களை இடுவதன்மூலம் ;

(2) அவ்வட்டவணையின் 23 ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயத்தை உட்புகுத்துவதன்மூலம் :-

| | |
|---|---|
| "24. அரசாங்க சார்பற்ற ஒழுங்கமைப் பொன்றினால் தாபிக்கப்பட்ட (பிரிவு 96அ) ஏதேனும் நிதியத்தின் அல்லது பெறப்பட்ட நிதியங்களின் பெறுமதியின்மீதான இலா பத்திற்கு ஏற்புடைத்தான வருமான வரிவீதம் | 30 சதவீதம்.". |

கடந்த காலத்தை உள்ளடக்கும் பயன்.

**43.** (1) முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவில் (இ) என்னும் பந்திக்கும் (1ஆ) என்னும் உட்பிரிவுக்கும் 123அ என்னும் பந்திக்கும் இச்சட்டத்தின் 17(1) மற்றும் (2) 32 ஆம் பிரிவுகளினால் செய்யப்பட்ட திருத்தங்கள் எல்லா நோக்கங்களுக்காகவும் 2002 ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாக கருதப்படுதல் வேண்டும்.

(2) முதன்மைச் சட்டவாக்கத்தின் 132ஆ என்னும் பிரிவுக்கு இச்சட்டத்தின் 37 ஆம் பிரிவினால் செய்யப்பட்ட திருத்தம் எல்லா நோக்கங்களுக்காகவும் 2003, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆஆ) என்னும் பந்தியின் (vi) ஆம் உட்பந்திக்கும் 29 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அஅஅ) என்னும் பந்தியின் (iv) ஆம் உட்பந்தியிலும் (2) ஆம் உட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியிலும் "வட்டி" என்பதன் வரைவிலக்கணத்திற்கும் 72அ, 144அ அத்துடன் 162அ என்னும் பிரிவுகளுக்கும் இச்சட்டவாக்கத்தின் பிரிவு 14(1)(ஆ), 17(3) அத்துடன் (4), 26, 39 அத்துடன் 40 என்பவற்றால் செய்யப்பட்ட திருத்தங்கள் எல்லா நோக்கங்களுக்காகவும் 2004, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளனவாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவின் (உ) என்னும் பந்திக்கு இச்சட்டத்தின் 6 ஆம் (1) ஆம் பிரிவினால் செய்யப்பட்ட திருத்தம் எல்லா நோக்கங்களுக்காகவும் 2005, சனவரி 1 ஆந் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) (LXXVIII) என்னும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவுக்கும், 39 ஆம், 134 பிரிவுகளுக்கும், இச்சட்டத்தின் 20 ஆம், 38 ஆம் பிரிவுகளால் செய்யப்பட்ட திருத்தங்களும், இச்சட்டத்தின் 10 ஆம், 27 ஆம் பிரிவுகளால் முதன்மைச் சட்டவாக்கத்திற்கு உட்புகுத்தப்பட்ட 16அ அத்துடன் 96அ என்னும் புதிய பிரிவுகளும் எல்லா நோக்கங்களுக்காகவும் 2005, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளனவாகக் கருதப்படுதல் வேண்டும்.

*2004 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தின் 61 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**44.** 2004 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டத்தின் 61 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "15 ஆம் பிரிவின் பந்தி (ந) அத்துடன் 48அ" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாகவும் " 6(5) ; 20, 24" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாகவும் முறையே "பிரிவு 48அ" என்னும் சொற்களையும் இலக்கத்தையும் அத்துடன் "21, 25 என்னும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "11 ஆம் உட்பிரிவில்" என்னும் சொற்களுக்கும் இலக்கத்துக்கும் பதிலாக "12 ஆம் பிரிவினால்" என்னும் சொற்களையும் இலக்கத்தையும் இடுவதன்மூலமும் ;

(3) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் "(அ) என்னும் பந்திக்கும் (அ) என்னும் பந்திக்கான காப்பு வாசகத்திற்கும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "(அ) என்னும் பந்திக்கான காப்பு வாசகத்திற்கும்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(4) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில் —

(அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "9, 10, 12, 18 அத்துடன் 21" என்னும் இலக்கங்

களுக்குப் பதிலாக "10,11,13,19 அத்துடன் 22" என்னும் இலக்கங்களை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(ஆ) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் :–

"(ஆ) முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவிற்கு உட்புகுத்தப்பட்ட (எஎ) என்னும் புதிய பந்தியும் இச்சட்டத்தின் 2(2) ஆம் பிரிவினாலும் 6(5) ஆம் பிரிவினாலும் 15 ஆம் பிரிவின் (ந) என்னும் பந்திக்கு செய்யப்பட்ட திருத்தமும் ;".

(5) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவில்

(அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "15(2) அத்துடன் (3), 17, 21, 22, 23" என்னும் இலக்கங்களுக்குப் பதிலாக "16(2) அத்துடன் (3), 18, 23, 24" என்னும் இலக்கங்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(ஆ) "131அ, 131ஆ, 132இ" என்னும் இலக்கங்களுக்கும் அத்துடன் "19, 25, 28" என்னும் இலக்கங்களுக்கும் பதிலாக முறையே "130ஈ, 130உ" என்னும் இலக்கங்களையும் "20, 26, 29" என்னும் இலக்கங்களையும் இடுவதன்மூலமும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**45.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி யிருத்தல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*